கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் திறப்பு

▶ சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் அகழாய்வு செய்யப்பட்ட இடங்களில் கிடைத்த தொல்பொருட்கள் வைக்கப்பட்டுள்ள இடத்தில் நான்கரை ஏக்கர் பரப்பளவில் 65 ஆயிரத்து 380 சதுர அடியில் ரூ.24.30 கோடி மதிப்பீட்டில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை முதல்வர் முக.ஸ்டாலின் நேற்று காணொலி மூலம் திறந்து வைத்தார். இதையடுத்து நேற்று முதல் பார்வையாளர்கள் அங்கு அனுமதிக்கப்பட்டனர்.

கவுரவ விரிவுரையாளர்கள் கோரிக்கை முதல்வர் விரைவில் தீர்வு காண்பார்

அமைச்சர் கோவி.செழியன் உறுதி

தஞ்சாவூர், பிப்.14: தஞ்சாவூரில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் நேற்று அளித்த பேட்டி: தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.56 கோடி மதிப்பிலான கட்டிடங்களுக்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது தஞ்சாவூர் மக்களுக்கு மட்டுமல்ல, ராஜராஜ சோழனுக்கு பெருமையை நிலைநிறுத்தும் வகையில், வாழும் ராஜராஜ சோழனுக்கு (மு.க.ஸ்டாலின்) தஞ்சாவூர் மாவட்ட மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசு கல்லூரிகளில் கவுரவ விரிவுரையாளர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கவுரவ விரிவுரையாளர்களுக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்ட சம்பளம் ரூ.15,000 மட்டுமே. தற்போதைய அரசு இரண்டு முறை தலா ரூ.5,000 என உயர்த்தி வழங்கியுள்ளது. இது போதிய ஊதியம் என நான் கூற விரும்பவில்லை. ஆனால், அவர்களுடைய கோரிக்கையை முதல்வரிடத்தில் எடுத்துச் சொல்லி உள்ளோம். முதல்வர் விரைவில் தீர்த்து வைப்பார். தற்போது வரை 31 மாதங்களுக்கு பெண்களுக்கு உரிமைத் தொகையை முதல்வர் தந்துள்ளார். இதன் மூலம் தமிழ்நாடு என்பது மகளிர் நாடு என்ற பெருமையை பெற்றிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினர்

தெற்கு ரயில்வே

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் / ரோலிங் ஸ்டாக் / தாம்பரம் அவர்கள், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் பின்வரும் பணிக்காக ஒப்பப்புள்ளி விலைப்புள்ளிகளை வரவேற்கிறார்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.	M/ET/RS/W8-2214 தேதி : 10.02.2026	M/ET/RS/W8-2215 தேதி : 10.02.2026
பணி பற்றிய விவரம்	"மரபு ரீதியான இளம்பு / எம்இஎம்பு மோட்டார் கோச்சுகளில் டிரான்ஸ்பார்மர் ஆயில் பைப் லைனுக்கு மாறுபாடு" – அளவீடு :131 மோட்டார் கோச்சுகள்	"மரபு ரீதியான இளம்பு / எம்இஎம்பு மோட்டார் கோச்சுகளில் டிரான்ஸ்பார்மர் ஆயில் பைப் லைனுக்கு மாறுபாடு"– அளவீடு :109 மோட்டார் கோச்சுகள்
பணியின் தோராய மதிப்பு	ரூ. 1,30,15,636/- (ரூபாய் ஒரு கோடியே முப்பது இலட்சத்து பதினைந்தாயிரத்து அறுநூற்று முப்பத்து ஆறு மட்டும்)	ரூ. 1,08,29,804/- (ரூபாய் ஒரு கோடியே எட்டு இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று நான்கு மட்டும்)

ஒப்பந்தப்புள்ளி பற்றிய முழு விவரங்களையும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் https://ireps.gov.in லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அவற்றை முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர், ரோலிங் ஸ்டாக், தாம்பரம், சென்னை – 600 045 அவர்கள் அலுவலகத்தின அறிவிப்பு பலகையில் காணலாம்.

உதவி கோட்ட மின்சார பொறியாளர் ரோலிங் ஸ்டாக் / தாம்பரம்
முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் /ரோலிங் ஸ்டாக் /தாம்பரம் அவர்களுக்காக

தெற்கு இரயில்வே

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : SA-E14-2025-26-W1-W4
தேதி : 10/02/2026

கோட்ட இரயில்வே மேலாளர் / மின்சாரம் / சேலம் கோட்டம் அவர்கள், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் பின்வரும் பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும். விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, தகுதி வரம்பு அம்சங்கள் ,ஒப்பபுள்ளி ஆவணம், ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் ஆகிய விவரங்களை www.ireps.gov.in இணைந்தளத்தில் பார்வையிடலாம். அவற்றை அந்த தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் .

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். தேதி மற்றும் பணி பற்றிய விவரம்	தகவல்கள்
1) SA-E14-2025-26-W1 தேதி : 10/02/2026. சேலம் கோட்டம் – மேட்டுப்பாளையம் எலக்ட்ரிக்கல் முனையம் விரிவாக்கத்திற்காக யார்டு மறுவடிவமைப்பு பணி – மின்சார (எலக்ட்ரிக்கல்) ஏற்பாடுகள்	தோராய மதிப்பு ரூ. 63,10,234.00/- பிணை வைப்பு தொகை ரூ.1,26,200.00/- பணியை முடிப்பதற்கான காலம் – 6 மாதங்கள்
2) SA-E14-2025-26-W2 தேதி : 10/02/2026. சேலம் கோட்டம் – சேலம் கோட்டத்தில் குறைபாடுள்ள LTUG கேபிள் பீடிங் இம்பார்ட்ன்ட் லோடுகளை வேறு வைத்து மாற்றுதல் – மின்சார (எலக்ட்ரிக்கல்) ஏற்பாடுகள்	தோராய மதிப்பு ரூ. 2,42,17,096.00/- பிணை வைப்பு தொகை ரூ.2,71,100.00/- பணியை முடிப்பதற்கான காலம் – 6 மாதங்கள்
3) SA-E14-2025-26-W3 தேதி: 10/02/2026. சேலம் கோட்டம் – கோயம்புத்தூர் வடக்கு நிலையம் – சாலை 6 க்காக கூடுதல் உயர்மட்ட சிங்கிள் பேஸ் நடைமேடை அமைத்தல் மற்றும் PSR என்பதை மணிக்கு 30 கிமீ லிருந்து மணிக்கு 60 கிமீ ஆக தளர்த்துதல் – மின்சார (எலக்ட்ரிக்கல்) ஏற்பாடுகள்.	தோராய மதிப்பு ரூ. 11,10,906.00/- பிணை வைப்பு தொகை ரூ.22,200.00/- பணியை முடிப்பதற்கான காலம் – 6 மாதங்கள்
4) SA-E14-2025-26-W4 தேதி: 10/02/2026. காரமடை – சாலை எண். 1 & 2 ன் CSL ஐ ஒவ்வொன்றும் 715 மீட்டருக்கு என்பதாக அதிகரிக்க ஏதுவாக உத்தேசிக்கப்பட்ட யார்டு மறுவடிவமைப்பு பணியை சாலை 2க்காக சிங்கிள் பேஸ் உயர் மட்ட நடைமேடையை 600 மீட்டருக்கு அதிகரித்தல் உடன் மேற்கொள்ளுதல் – மின்சார (எலக்ட்ரிக்கல்) ஏற்பாடுகள்	தோராய மதிப்பு ரூ. 16,19,795.00/- பிணை வைப்பு தொகை ரூ.32,400.00/- பணியை முடிப்பதற்கான காலம் – 6 மாதங்கள்
மேற்காணும் பணிகளுக்கான மூடப்படும் தேதியும் நேரமும்	11.03.2026 அன்று 15.00 மணி
மேற்காணும் பணிகளுக்காக ஒப்பப் புள்ளிகள் திறக்கப்படும் தேதியும் நேரமும்	11.03.2026 அன்று 15.30 மணி

அனைத்து சேர்த்தல்கள் / திருத்தம், கால நீட்டிப்பு , ஐயப்பாடு தீர்த்தல் ஆகியவை www.ireps.gov.in இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். தனியாக நாளிதழ்களில் வெளியிடப்படமாட்டாது. ஒப்பபுள்ளியாளர்கள், அவ்வப்போது இணைய தளத்தைப் பார்த்து அண்மை தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும்.

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : GEM/2026/B/7198001
தேதி : 11/02/2026

கோட்ட இரயில்வே மேலாளர் / மின்சாரம் / சேலம் கோட்டம் , சேலம் – 5 அவர்கள் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் பின்வரும் பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும். விரிவான தகுதி வரம்பு, ஒப்பப்புள்ளி ஆவணம், ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் ஆகிய விவரங்களை www.gem.gov.in வலைதளத்தில் காணலாம். அதிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: தேதி மற்றும் பணி பற்றிய விவரம்	தகவல்கள்
1) GEM/2026/B/7198001 தேதி : 11-02-2026- சேலம் கோட்டம் – கோயம் புத்தூர் முதன்மை பராமரிப்பு இரயில் வண்டிகளின் ஏசி பெட்டிகளில் எலக்ரிக்கல் சார்ந்த கடமைப் பணிகளை மேற்கொள்ள ஆன்போர்டு டெக்னிசியன்களுக்கு உதவி புரிவதற்காக, ஏசி எஸ்கார்ட்டிங் என்னும் பாதுகாப்பு கடமைப் பணியில் ஒப்பந்த ரீதியான உதவியாளர்களை இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு அமர்த்துதல்.	தோராய மதிப்பு ரூ.1,53,63,054 /- பிணை வைப்பு தொகை ரூ.3,07,261/- பணியை முடிப்பதற்கான காலம் – 6 மாதங்கள்
மேற்காணும் பணிகளுக்கான மூடப்படும் தேதியும் நேரமும்	05.03.2026 அன்று 17.00 மணி
மேற்காணும் பணிகளுக்காக ஒப்பப்புள்ளிகள் திறக்கப்படும் தேதியும் நேரமும்	05.03.2026 அன்று 17.30 மணி

அனைத்து சேர்த்தல் / திருத்தம், கால நீட்டிப்பு, ஐயப்பாடு தீர்த்தல் ஆகியவை www.gem.gov.in இணையதளத்தில் மட்டுமே பதிவேற்றம் செய்யப்படும். தனியாக செய்தித்தாட்களில் வெளியிடப்படமாட்டாது. ஒப்பப்புள்ளியாளர்கள், அவ்வப்போது இணையதளத்தைப் பார்த்து அண்மை நிலவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் .

கோட்ட இரயில்வே மேலாளர் (மின்சாரம்) சேலம் – 636 005

கரூரில் மணல் கடத்தலில் ஈடுபட்டதாக அதிமுக மாஜி அமைச்சர் மீது வழக்கு

பறிமுதல் செய்ய முயன்றபோது போலீசுடன் தள்ளுமுள்ளு

கரூர்,பிப்.14: மணல் கடத்தலில் ஈடுபட்டதாக அதிமுக முன்னாள் அமைச்சர் எம். ஆர்.விஜயபாஸ்கர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டம் வாங்கல் அடுத்த முனியப்பனூர் காவிரி ஆற்றுக்கு கடந்த 11ம்தேதி முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தலைமையில் அதிமுகவினர் வந்து, அங்கு மணல் அள்ளி கொண்டிருந்த லாரி மற்றும் 2 பொக்லைன் மற்றும் 5 மணல் அள்ளும் வாகனங்களை சிறைபிடித்தனர். தகவல் நிந்ததும் மண்மங்கலம் தாசில்தார் சத்தியமூர்த்தி சென்று லாரி, இயந்திரங்களை கைப்பற்றி வாங்கல் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். இது தொடர்பாக வாங்கல் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இதுபற்றி முனியப்பனூரை சேர்ந்த பொதுமக்கள் கூறுகையில், "இங்கு முறையான அனுமதியுடன் தான் மணல் அள்ளப்படுகிறது. தேர்தல் வருவதால், எம். ஆர்.விஜயபாஸ்கர் விளம்பரத்துக்காக இவ்வாறு செய்கிறார். இதனால் எங்களது தொழில் பாதிக்கப்படுகிறது" என்று வேதனையுடன் கூறினர்.

▶ மாஜி அமைச்சர் விஜயபாஸ்கரின் புதிதாக கட்டப்படும் வீட்டு அருகே பதுக்கி வைத்திருந்த மணலை பறிமுதல் செய்ய வந்த போலீசார் மற்றும் அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்யும் அதிமுகவினர்.

இந்நிலையில் விஜயபாஸ்கர் மற்றும் அவருக்கு நெருங்கிய ஒருவர் வீடுகளில் மணல் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்த மணலை, பறிமுதல் செய்ய வேண்டுமென விஜயபாஸ்கர் வீட்டுக்கு செல்லும் வழியான கரூர்-கோவை சாலையில் 20 மாட்டு வண்டிகளுடன் 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடந்த 11ம் தேதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் ஆண்டாங்கோவில் புதூரில் உள்ள அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மனைவி விஜயலட்சுமிக்கு சொந்தமான இடத்தில் 12 யூனிட் ஆற்று மணல் கொட்டப்பட்டு உள்ளது. அதற்கு உரிய ஆவணங்கள் இல்லை. எனவே மணலை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கரூர் நகர போலீசில் ஆண்டாங்கோவில் கிழக்கு விஏஓ சண்முகம் நேற்று முன்தினம் புகார் அளித்தார். அதன்பேரில் மணல் கடத்தலில் ஈடுபட்டதாக எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது போலீசார் 2 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிந்துள்ளனர்.

நேற்று முன்தினம் விஜயபாஸ்கர் வீட்டின் அருகே சாமியாத்தாள் என்பவருக்கு சொந்தமான இடத்தில் 100 யூனிட் மணல் கொட்டப்பட்டிருந்தது. அந்த மணலை சாமியாத்தாள் மருமகனும், ஆண்டாங்கோவில் புதூர் அதிமுக கிளை செயலாளருமான தனபால் ஆவணங்களின்றி கொட்டி வைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் மற்றும் வருவாய்த்துறையினர் தனபால் வீட்டிற்கு சென்றனர். அவர்களை அதிமுகவினர் தடுத்து நிறுத்தினர். இதனால் அதிகாரிகளுக்கும் அதிமுகவினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளுமுள்ளு நடந்தது. இதைதொடர்ந்து அங்கிருந்த 100 யூனிட் மணலை வருவாய்த்துறை மற்றும் கணிமவளத்துறையினர் எடுத்து சென்றனர். மேலும் தனபால் மீது போலீசார் 2 பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்து உள்ளனர்.

கொடநாடு வழக்கு: ஒருவருக்கு பிடிவாரன்ட்

ஊட்டி, பிப். 14: ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோருக்கு சொந்தமான கொட நாடு எஸ்டேட் பங்களாவில் கடந்த 2017 ஏப்ரல் 23ம் தேதி காவலாளியை கொலை செய்து, முக்கிய ஆவணங்களை கொள்ளையடித்த வழக்கில் சயான் உட்பட 10 பேரை போலீசார் கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு ஊட்டி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பு வழக்கறிஞர்கள் ஷாஜகான் மற்றும் கனகராஜ் ஆகியோரும், ஏடிஎஸ்பி முருகவேல் தலைமையிலான சிபிசிஐடி போலீசாரும் ஆஜராகினர். குற்றவாளிகள் தரப்பில் மனோஜ் சாமி, சந்தோஷ் சாமி, சதீஷன் மற்றும் தீபு ஆகியோர் ஆஜராகினர். விசாரணைக்கு ஆஜராகாத வாளையார் மனோஜிக்கு பிடிவாரன்ட் பிறப்பிக்கப்பட்டது. நீதிபதி சந்திரசேகரன் விசாரணையின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து, விசாரணையை வரும் மார்ச் 6ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

கட்டிட கான்ட்ராக்டர் கார் ஏற்றி கொலை

நாகர்கோவில், பிப்.14 : குமரி மாவட்டம் தெங்கம்புதூர் அடுத்த பணிக்கன்குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் ஜெயகுமார் (49). மணல், ஜல்லி வியாபாரம் செய்து வருகிறார். இவருக்கு, கன்னியாகுமரி அடுத்த தெற்கு கரும்பாட்டூர் பகுதியை சேர்ந்த விக்டர் ராஜதாஸ் என்பவர், ரூ. 1 லட்சத்து 2 ஆயிரம் கொடுக்க வேண்டும். ஆனால் இதை கொடுக்காமல் இழுத்தடிப்பு செய்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையே பிரச்னை இருந்து வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு, நாகர்கோவில் செட்டிக்குளம் பகுதியில் விக்டர் ராஜதாஸ் நடத்தி வரும் எலக்ட்ரானிக் கடைக்கு சென்று, பணத்தை ஜெயக்குமார் கேட்டுள்ளார். அப்போது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. உடனே ஜெயகுமார், தனது சகோதரர் விஜயகுமாருக்கு போன் செய்து தெரிவித்துள்ளார். சிறிது நேரத்தில் அவரும் வந்து, விக்டர் ராஜதாசிடம் பணத்தை கேட்டு தகராறு செய்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த விக்டர் ராஜதாஸ் திடீரென காரில் ஏறி வேகமாக எடுத்து ஜெயகுமார், விஜயகுமாரை இடித்து தள்ளி விட்டு உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி விட்டு சென்றார். கார் மோதியதில் விஜயகுமார் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்தார்.

மனமகிழ் மன்றம் செயல்பட தடை

ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, பிப். 14: மதுரை விரகனூர் பகுதியை சேர்ந்த பிரபாகரன், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், "மதுரை விரகனூர் சுற்றுச்சாலையில் மனமகிழ் மன்றம் செயல்பட்டு வருகிறது. மதுரை விரகனூர் ரவுண்டானா அருகே தேசிய நெடுஞ்சாலையில் மனமகிழ் மன்றம் நடத்தப்படுகிறது, இதனால் அப்பகுதியில் பேருந்து நிறுத்தத்தில் நிற்கும் பயணிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர். சட்டம், ஒழுங்கு பிரச்னை ஏற்படும் சூழ்நிலை உள்ளது. மனமகிழ் மன்றத்திற்கான விதிகளை மீறி செயல்படுகிறது. எனவே, இந்த மனமகிழ் மன்றம் செயல்படத் தடை விதிக்க வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வக்கீல் உதயகுமார் ஆஜராகி, "மனமகிழ் மன்றங்களில், உறுப்பினர்களுக்கு மட்டுமே மது வழங்கப்பட வேண்டும். உறுப்பினர் அல்லாதோருக்கு மது விற்பனை செய்யக் கூடாது. ஆனால், மனமகிழ் மன்றங்கள் உரிமை பெற்றவர், டாஸ்மாக் கடை நடத்துவது போல் விளம்பர போர்டு மற்றும் பார் வைத்து மது விற்பனை நடைபெறுவது சட்டவிரோதம். எனவே, இதற்கு தடை விதிக்க வேண்டும்" என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், "சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு செய்து விதிமீறல் இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவரை மனமகிழ்மன்றம் செயல்பட இடைக்கால தடை விதிக்கப்படுகிறது" என உத்தரவிட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நீலகிரி மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி கோரும் படிவம் எண். 0086/2026/அ2 நாள் 12.02.2026
நபார்டு XXXI (NABARD XXXI) 2026-2027

1. முழுமையான விபரங்களுக்கு, www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியை பார்வையிடவும்.
2. கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) /திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நீலகிரி மாவட்டம் அவர்களால் 2026–2027ம் ஆண்டு நபார்டு XXXI (NABARD XXXI) 2026–2027 சாலை பணிகள் அமைக்கும் பணிக்கு மின் ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி நகலாவினை www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் 14.02.2026 முதல் 20.02.2026 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. சிப்பம் வாரியான மொத்த மதிப்பீட்டு தொகையில் 1 சதவீகிதம் தொகை முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும்.
5. வேலைகள் தொடர்பான கூடுதல் விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் தேவைப்படின், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட அலுவலர், நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நேரில் தெரிந்துக்கொள்ளலாம்.
6. ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய, சமர்ப்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம்

ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய நாள் மற்றும் நேரம்	14.02.2026 முதல் 20.02.2026 காலை 10.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	20.02.2026 காலை 10.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் நேரம்	20.02.2026 காலை 11.00 மணிக்கு மேல்

செ.ம.தொ.இ.1087/ஒப்பந்தப்புள்ளி/2026

கூடுதல் ஆட்சியர்(வ)/திட்ட அலுவலர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நீலகிரி

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு
திருவாரூர் மாவட்டம்

நபார்டு திட்டம்-2026-2027 (NABARD-RIDF)-ன் கீழ் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துதல் பணிக்கான குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண் 565/2025/அ9

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதளத்தினை பார்க்கவும்.
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவாரூர் – கூடுதல் ஆட்சியர்(வ) திட்ட அலுவலர் அவர்களால் திருவாரூர் மாவட்டத்தில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்யும் பணிகளுக்கு சிப்பங்கள் வாரியாக மின்ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி நகலாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 13.02.2026 முதல் 20.02.2026 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. மின்னணு ஒப்பந்த நகலாவினை பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் 20.02.2026 பி.ப. 3.00 மணி வரை
5. மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 20.02.2026 பி.ப. 4.00 மணி முதல்

செ.ம.தொ.இ.1085/ஒப்பந்தப்புள்ளி/2026

கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/ திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவாரூர்.

தெற்கு இரயில்வே
(கட்டுமான நிறுவனம்)
மின்னணு ஒப்பந்தப்புள்ளி

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 42-CECNMS-2026-E-630483 தேதி: 09.02.2026
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். CAO-CN-MS-PMS-01-2026 தேதி: : 11.02.2026

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் தலைமை பொறியாளர், கட்டுமானம், தெற்கு இரயில்வே, எழும்பூர், சென்னை – 600 008 அவர்கள், எமது வலைதளம் www.ireps.gov.in-ல் வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி பின்வரும் பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். ஒப்பந்தப்புள்ளிக்காக விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தப்புள்ளியாளர்கள்/ஒப்பந்தக்காரர்கள் www.ireps.gov.in-ல் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும் .

பணி பற்றிய விவரம்

பேசின்பிரிட்ஜ் கோச்சிங் யார்டு – கேட் வாக் உடன் கூடிய 3 பிட் லைன்கள் அமைத்தல் 24 எல்எச்பி கோச்சு நீளத்திற்கு – என்எல் – 4 , 5 மற்றும் 6 க்கு பதிலாக & என்எல் –1 கேட் வாக்–க்கு புதுப்பொலிவூட்டுதல் (Refurbishing) (இரண்டு உறை முறை)

வ எண்	ரொக்க மதிப்பு ரூ-	பிணை வைப்பு தொகை ரூ-	பணியை முடிப்ப தற்கான காலம் (மாதங்களில்)	15.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதி
1.	568487850.53	2992400.00	18	05.03.2026

பணி பற்றிய விவரம்

தமிழ்நாடு மாநிலத்தில் – செயினேஜ் 12100 M லிருந்து 17200 M வரை போர்ப்படக்குறிச்சி (H) நிலையம் (தவிர) முதல் கள்ளகுறிச்சி (X) (உட்பட) வரையாக புதிய அகலப்பாதை கட்டுமானம் செய்வதற்காகவும் அதனுடன் சின்ன சேலம் மற்றும் கள்ளக்குறிச்சி செயல்திட்டம் இடையே (சிவில் மற்றும் இருப்பு ப்பாதை பணிகள்) உத்தேசிக்கப்பட்ட புதிய அகலப்பாதை லைனில் யுடிலிடி ஷிப்பட்டிங் என்னும் பயன்பாட்டு மாற்றத்திற்காகவும் செயல்திட்ட மேலாண்மை சேவைப் பணிகளை (Project Management Services) வழங்கிட அதிகாரப் பூர்வ பொறியாளர் (Authority Engineer)

ரொக்க மதிப்பு ரூ-	பிணை வைப்பு தொகை ரூ-	பணியை முடிப்ப தற்கான காலம் (மாதங் களில்)	15.30 மணியளவில் ஒப்பந்தப் புள்ளி மூடப்படும் தேதி	11.30 மணி யளவில் ஒப்பந்தப்புள்ளிக்கு முந்தைய ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்
2.63	281700.00	24	24.03.2026	26.02.2026

மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் www.ireps.gov.in அல்லது தலைமை நிர்வாக அதிகாரி , கட்டுமானம், ஈ.வே.ரா. நெடுஞ்சாலை, எழும்பூர், சென்னை – 600 008 அவர்கள் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

தலைமைப் பொறியாளர் (கட்டுமானம்), எழும்பூர் , சென்னை – 600 008
(மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காக)

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்

CIN No.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
பதிவு அலுவலக முகவரி: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்-641607.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com,
அதிகாரப்பூர்வ அதிகாரிகள் கைபேசி எண்: + 91 93446 84194/ 98840 62068/ 99623 33307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) & 9(1) விதிகளை காணவும்]

அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை பொது அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது. ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஓஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஓஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு எடெல்வீஸ் வீட்டுவசதி நிதி லிமிடெட் (உரிமையீந்தோர்) வசமிருந்து 26.02.2021 தேதியிட்ட உரிம